UTTAMA NEETI

THE FIRST SATAKAM.

உத்தம நீதி

முதற் சதகம்.

BY

MOSUR VENKATASWAMI AIYER.

மறைமலையடிகள் நூல்நிலையம்
MARAIMALAI ADIGAL LIBRARY
MADRAS-1

இது,

தமிழிற் பயிலும் இருபாலவர்க்கும் பயன்படுமாறு,

ஸம்ஸ்கிருதத்திலுள்ள உத்தமமான நீதிகளைத் தெளிவான நடையிற்

பாடிய நூறு பாக்களும்,

அவற்றி லமைந்த அரும்பதங்களின் விளக்கமு முள்ளது.

PRINTED AT THE S. P. C. K. PRESS, VEPERY, MADRAS.

1908.

Price, Annas 2.] (All Rights Reserved.) [விலை, அணா ௨.

முகவுரை.

திவ்விய நீதியுள்ள **திருக்குறள், நாலடியார்** முதலியவை இலக்கிய விலக்கணங்களிற் பெரிது பயின்றார்க்கே பயன்படுகின்றன. கடுஞ் சொல் லற்ற தெள்ளிய வசநநடை நூல்களே மிகுதியும் வழங்கு மிக்காலத்தில், உத்தமமான நீதிகளடங்கிய தெள்ளிய பாக்கள் பல விருப்பது அநுசிதமாகாதென நினைந்து வடமொழி, தென்மொழி, ஆங்கிலமாகிய இவைகளிற் பெற்றுள்ள சிறு பயிற்சியின் உதவி கொண்டு பல பாக்க ளெழுதினன். தென்னிந்தியாவி லுள்ளோர் பலருங் கொள்ளக்கூடியதாகுமாறு அவற்றைச் **சதகங்களாய்** அச்சிட்டுச் சிறுவிலையுள்ள சிறு புத்தகங்களாக்கிக் கொடுக்க நாடினன்.

இம் **முதற்சதகத்தில்** அடங்கிய நூறு பாக்களிலுமுள்ள அரும் பதங்களை விளக்க, **அரும்பத விளக்கமும்**, ஒவ்வொரு செய்யுளின் கருத்தையுங் குறிப்பிக்க அதது கொண்ட கருத்தின் அவதாரிகையுங் கூட்டியுளன்.

இஃது, எம்மதத்தவர்க்குஞ் சம்மதமான நீதியும், இருபாலவருங் கற்கத்தக்க விடயங்களுமே கொண்டுளது.

இஃது கற்றோரும் மற்றோரும் உவப்பதாயின், மற்றைய சதகங்களையும் விரைந்து வெளியிடுவென்.

"குணநாடிக் குற்றமு நாடி யவற்றுள்
மிகைநாடி மிக்க கொளல்."

சென்னை:
13–5–08.

மோசூர். வேங்கடசாமி ஐயர்.

கடவுள் துணை.

உத்தம நீதி.

முதற் சதகம்.

1. நல்லோர் தீயோர் தங்கள் காலம் போக்கும் வகை.

கலைபல வாய்த லானுங்
    காப்பிய நுகர லானும்
விலையில தாய காலம்
    வீணினிற் கழியார் மேலோர்
நிலைவரு நிந்தை யாலும்
    நித்திரை யாலு நல்லார்
தொலைவுறு கலகத் தாலுந்
    தொலைப்பர்வா ணாளைக் கீழோர்.

2. நல்லார் புல்லாரிடையுற்றும் புல்லார் ஆகார்.

இன்குரற் குயில்கண் முட்டை
    யிட்டிடுங் காகக் கூட்டிற்
புன்குரற் காக மூட்டிப்
    போற்றிடுந் தன்ன வென்ன
வன்குரற் காகக் காகா
    வாய்ந்திடல் குயில்கட் கின்றும்
புன்குலத் திடையி னுற்றும்
    புகழ்க்குண மிழவார் நல்லோர்

3. ஆபத்தை வருமுன்னரே நீக்க முயலாமை பேதைமை.

இடர்வர லுணரி னீக்கற்
கெண்ணுத லறிவே யன்றி
இடர்வர லுற்று முற்ற
வெண்ணுத லறிவன் றாகும்
படர்வுறு தீயோ ரில்லம்
பற்றிய பின்னர் நீராற்
கெடலற வவிப்பா னேடிக்
கேணியைத் தொடுதல் போலும்.

4. அசூயை யற்ற குணவான்களே குணவான்கள்.

குணமிக வுடைய ரல்லாற்
குணம்பிற ருழையிற் காணார்
குணமிக வுடையா ரந்தோ!
கொள்பமாற் சரியப் பேயை
குணமிக வுடைய ராகிக்
குணம்பிற ருழையிற் காண்பார்
மணமிகு பொற்பூ விந்த
மண்ணிடை யுற்று லொப்பர்.

5. நல்லாராவார் இன்னாரெனல்.

நன்மையைப் புரிந்த வர்க்கே
நன்மையைப் புரிவோ ரூற்ற
நன்மையை நன்மை யென்ன
நவில்பவ ராகார் சான்றோர்
தின்மையைப் புரிந்த வர்க்குந்
திருப்பல ராகித் தின்மை
நன்மையைப் புரிய வல்லோர்
நவையறு நல்லோ ரென்ப.

6. தீச்செயல் புரியாராகும் வகை.

மற்றவர் நினக்குச் செய்யின்
மனம்பொருச் செய்கை யேதும்
மற்றவர் தமக்கு நீயும்
மறப்பினுஞ் செய்யே லுன்னைச்
செற்றெவர் தீமை யான
செய்யினும் பொறுத்தல் சீற்றம்
அற்றவர் பெருமை கூறின்
அமரரு மிணையா கார்கள்.

7. நம்முளம் நம்மை உள்ளபடி நமக்குக் காட்டும்.

நம்முள வாடி நோக்கி
னுமுள வாறு காண்போம்
நம்முள நோக்கிக் காணு
நரர்நமை நல்லா ரென்ன
நம்முள வாடி மாற்றி
நல்லராய்க் காட்ட லுண்டோ?
நம்முள வாடி மாற்ற
நம்மைநா மாற்றல் வேண்டும்.

8. பேரறி வில்லார் பெற்ற பெருங்கல்வி வீண்.

பெரியவாங் கலைகள் யாவும்
பெட்பினி லுழைத்து வல்லோன்
அரியதா மோக்க ஞான
மடைந்தில னாயி னந்தோ!
விரியொளி மணிபொன் னாரம்
வேண்டுவ பூண்டு நின்ற
உரியமங் கலநா ணொன்றை
யுற்றிலாக் கைம்பெ ணாகும்.

9. மெலியோரை வலியோர் வருத்தா வகை.

மெலியவர் மீதிற் சென்று
மிகுமறங் காட்ட லுன்னில்
வலியவ ருன்னை யாங்ஙன்
வருத்திட வந்தா லுள்ளம்
நலிவதை நினைக மற்றோர்
நலிவன புரியாய் நம்பீ!
அலியதி லாகா யாகா
யறிஞரி லறிஞ னுவாய்.

10. மற்றவர்க் கறிவுகூற வல்லோர் பலர்.

மற்றவர்க் கறிவு கூற
மண்ணிடை வல்லோர் பல்லோர்
கற்றவர் தாமு நூலிற்
கருதிய வொழுக்கங் கல்லார்
பெற்றமெய் யறிவிற் சில்லோர்
பிறர்க்கறி வூட்டு முன்னர்
உற்றநல் லொழுக்க நம்பா
லுள்ளதோ வென்ன வாய்வார்.

11. ஆத்துமாவும் உடலும் வேறென்றறிதல்.

உடல்கொளு முடைக ளுக்கும்
உடலுக்கு முறவே துண்டோ?
உடலுமுள் ளான்மா விற்கோ
ருடையினிற் பிறிது தேர்மின்
கெடலுள வுடையைப் போற்றக்
கெடுத்திடீ ருடலை யாங்கே
சுடலைசே ருடலைப் போற்றத்
துன்மையான் மாவிற் கீயேல்.

12. வருந் துன்பங்கள் நம்முடைய நன்மைக்கே.

உடலுறு பிணிக ளோங்கி
யுறுதுயர் விளைக்கி லன்ன
சுடலுறு மருந்தை யுண்ணச்
சுகம்வர லாகு மென்பீர்
கெடலுறின் மனம் வாய் செய்கை
கிருபையே யாகுன் றுன்பம்
அடலுறி னல்லா ராத
லறிந்தளிக் கின்ற னென்க.

13. அறிவுளார் துன்பங்கள் கடவுளின் அருள் என்பர்.

குந்தியா மைவ ரன்னை
கோக்களிற் கோவின் றேவி
"வந்தியேன் கண்ண! நின்னை
வருத்திடு துன்ப மின்றிச்
சிந்தியேன் வாழ்வை மேலாச்
செய்யுநின் றுண்ம றப்பப்
புந்தியா னின்னைப் போற்றப்
புரிந்தரு டுன்ப" மென்றாள்.

14. தகுதியில் புகழ்ச்சிக்குக் களியாதே.

உண்ணவோர் சிறிது மின்றி
யுயங்கிய வுன்னை நோக்கி
யண்ணலி னுண்டாய் போலு
மகங்களிக் கின்ற யென்னி
லெண்ணலின் மாற்ற மின்ன
வியம்பலை யென்பாய் பொய்யே
யுண்ணல மிக்கா யென்ன
வுளமகிழ் வுறுவ தோநீ?

15. பெரியோரேயன்றிச் சிறியோர் பிறர் தீமை பொறார்.

துன்பினைப் பொறுக்கு மாற்ற
    றுகளறு பெரியோர்க் கன்றி
வன்புறு சிறியோர்க் கென்றும்
    வாய்த்திட லின்று கண்டீர்
கொன்புறச் சாணைத் துன்பங்
    குருமணி பொறுப்ப தன்றிப்
புன்புற மண்ணுங் கட்டி
    பொறுத்திட லுண்டு கொல்லோ?

16. அறிஞர் ஆனோர் செய்கைகள்.

அறிவுளான் பிறன் றாரத்தை
    யன்னையிற் கருது மேலாம்
அறிவுளான் பிறன் செல்வத்தை
    யற்பமா மண்ண யெண்ணும்
அறிவுளா னுயிர்க டம்மை
    யவனுயி ரென்ன வுன்னும்
அறிவுளா னுலகின் வாழ்வை
    யாடுந ராட்ட மென்னும்.

17. நமக்குத் துணையாவது அறமொன்றே.

கரிபரி யாக்க ளாய
    கட்டிய தலத்து மாழ்கி
விரிகுழன் மனைவி மக்கள்
    வீட்டினி லீட்டி வைத்த
பெருமணி கனக நிற்பப்
    பேழையிற் சிதைமேற் காயம்
அரிதினிற் போகு மாவிக்
    கறனென்றே துணையா யேகும்

18. நன்னடையில்லார் கல்வி யறிவு வீண்.

கல்வியிற் கடலே யானுன்
கவினுறு கவியே ருனுன்
சொல்வலி மிகுத்தான் கானச்
சுவைக்குத் தும்புருவு மானுன்
நல்வழி நடையி லானேல்
நாய்க்குயப் பாலா மெல்லா
மல்வயிற் புலித்தோல் போர்த்திங்
கலைதரு கரமே யாவன்.

19. மேலோர் தாஞ் சொன்ன சொன் மாருர்.

உரியநற் பிராசி யேங்க
வுதிப்பினு மேற்கிற் பானு
வெரியது தகித்த லின்றி
யிம்மெனக் குளிர்ச்சி யுற்றும்
பரியென வசல மோடிப்
பங்கயம் பதலை யீன்று
மரியதாஞ் சான்ருேர் மாற்ற
மறைந்ததின் வேரு யாதல்.

20. கொடிய குட்டநோயினுங் கொடியது பாவம்.

குட்டமும் வினையு மென்னக்
கொடியநோ யிரண்டி லிங்குப்
பட்டழி யுடலைக் குட்டம்
பற்றறச் சிதைப்ப தாகும்
விட்டகல் வில்லா தாய
வினைவிளி யாத வான்மா
மட்டறு துன்பிற் பன்னுண்
மாழ்குறச் செய்யு நோயாம்.

21. நல்லா ரல்லார் நால்வர் புகழ்ந்தும் தீயரே.

அல்லதைப் பொன்னிற் பூசி
    யாயது பொன்னு லென்னுஞ்
சொல்லது வாய்க்கப் பூணிற்
    றுகளறு பொன்னிற் போமோ?
இல்லதை நின்பான் மூட
    ரிருப்பதாப் புகழி னீயு
நல்லதாக் கருதா மைக்கு
    நவிலுநின் னடுவார் நெஞ்சம்.

22. அகத்தூய்மை யில்லா ரநுஷ்டானங்கள் வீண்.

நீரினின் மூழ்கி முக்கா
    னீற்றினை யணிந்து தேவர்
பேரினை நாவி லூன்றிப்
    பிறங்குகண் மணிகள் பூண்டோர்
நேரறு மனத்தின் றூய்மை
    நேர்ந்தில ராயி னந்தோ!
வாரரா வாத முண்டு
    வளைபுரி தவத்தோ ராவர்.

23. மேலோர் சினமும், கீழோர் நட்பும் ஒன்றும்.

ஆவதே யின்று மோர்கா
    லாகினும் பன்னுண் மட்டும்
போவதோ வன்று மோர்காற்
    போகினும் பலித்த லேது
மாவதோ வின்று மேலோ
    ரானவ ருழையிற் சீற்ற
மோவலா காத கீழோ
    ருழைவரு நட்புப் போலும்.

24. தீவழியிலுற்ற செல்வத்தினாற் செய்யும் அறமும் தீதாம்.

ஆவினை வதைத்துத் தோலா
　　லாக்கிய செருப்புத் தானம்
மாவினை விளைப்ப தன்றி
　　மாணறம் விளைப்ப தன்றாம்
நாவினை யுளத்தைக் கையை
　　நன்றலா வழியி லாக்கிக்
கோவினை நிகர்செல் வத்துக்
　　கொண்டநல் வினையுந் தீதாம்.

25. உயர்குல முற்றுங் கீழோர் கீழோரே.

அலரிடைப் பிறந்து வாழ்ந்த
　　வற்பமாம் புழுவை நோக்கி
யலரிடைப் புழுவீ தென்ன
　　வாதரித் திடுவார் யாவர்?
பலருமே யிகழ வாழ்வோர்
　　பண்புள குலத்தோ ராயின்
குலநல மொன்றை யெண்ணிக்
　　கொண்டிடார் மேலா மேலார்.

26. மண்மாந்தர் மண்மாந்தரே.

மண்முத லாய கூடி
　　மதியுறு மனித னாகிக்
கண்முத லாய சான்ற
　　கருவிக ளுதவ வாடிப்
பண்முதற் பலவுந் தேர்ந்து
　　பலப்பல வரிய செய்தும்
மண்மகன் பன்னாள் வாழ்ந்தும்
　　மண்ணினிற் கலப்போ னேயாம்.

27. வறுமையை யஞ்சி அறிஞர் ஈவர், அல்லா ரீயார்.

பெற்றபே ரறிவி னல்லோர்
பெட்புட னீவ ரஞ்சா
வுற்றபே ரொழிய வின்மை
யுடற்றுமே லீயோ மென்ன
மற்றவ ராவார் செல்வம்
மாறிடு மீய வென்று
வுற்றநா ளுதவா ரஞ்சி
யொழிந்தநா ளுதவ லுண்டோ?

28. புன்மை நீங்கார் கல்வி யறிவு வீண்.

மருந்தினை முறையி னுண்ணின்
மாறுநோ யென்ப துண்டான்
மருந்தினை யருந்த லுற்றான்
மறுத்தன மருமை யுண்ணிற்
றிருந்திய வுடல னாமோ?
தீருமோ நோயு மாந்தர்
பொருந்திய கல்வி யான்முற்
புன்மையை விடுத்தோ ராக.

29. கெட்ட மனைவியுடன் வாழ்வதிலும், காடு சேர்தல் நலம்.

காடுபோந் துறைத னன்றுங்
கனிகரத் தாயை யின்றிக்
கேடுசேர் மனைவி யாற்றுங்
கீழ்மையிற் கலுழ்த லன்றும்
வீடுபோற் காடு தீதாய்
வெறுப்பினை விளையா தாகுங்
கோடுசேர் கனிகா யுண்ணக்
குலைவறு துயிலு முண்டாம்.

30. நல்லோரையே எவரும் வருத்துவர்.

விண்ணிடைப் பறந்து லாவி
விருக்கத்தில் விருப்பின் வைகி
யெண்ணிலாப் பறவை யந்தோ!
வினத்துட னினிது வாழக்
கண்ணுற மாந்த ருன்னைக்
கடுஞ்சிறைக் கூட்டில் வைத்தல்
பண்ணுறு மினிய மாற்றம்
பகர்தலின் பயனே கிள்ளாய்!

31. மாந்தருக்கு உயிரினும் மிக்கது செல்வம்.

இங்குறை மாந்தர் யாரு
மிருவகை யுயிரின் வாழ்வர்
தங்கிய துடலி லொன்று
தாமுறு பொருளே யொன்று
மிங்கிவை தம்மின் முன்ன
தேகிடி னுழலா ராவர்
பொங்குபொன் னுவி தீரப்
புகனடைப் பிணங்க ளாவர்.

32. இவ்வுலகில் மிக்க துக்கமுடையா ரிவர்கள்.

பொருளிலான் புவியிற் றுக்கி
புகன்றிடி னவனிற் றுக்கி
தெருளிலாக் கடனிற் பட்டோன்
செப்பிடி னவனிற் றுக்கி
வெருளுறு தீரா நோயன்
விளம்பிடி னவனிற் றுக்கி
யிருளுறு மனத்துத் தீய
வில்லவ்வள் வாய்க்கப் பெற்றோன்

33. செல்வத்திற்குள்ள சிறப்பு.

வயதினுற் பெரிய ராஞேர்
வான்றவம் பெரிய ராஞேர்
மயர்வகல் கல்வி கேள்வி
மாட்சியிற் பெரிய ராஞேர்
வயதினுற் றவத்தாற் கல்வி
மாட்சியாற் பெரியனல்லாக்
கயவனுஞ் செல்வ னில்லக்
கடைத்தலைக் காத்து நிற்பார்.

34. கல்வி செல்வம் அறம் இவற்றை யீட்டுக.

புந்திசேர் மாந்த ரிந்தப்
புவியிடை மூப்பி ஞேடும்
வந்திடு மரண நீங்க
வரவரம் பெற்ரு லென்னச்
சிந்தையிற் களிப்பி ஞேடுந்
தேடுக கல்வி வித்த
மந்தகன் வாயிற் பட்ட
தாவியென் றறத்தைச் செய்க.

35. செல்வமில்லார்க்கு வனமே இன்பந் தருவதாம்.

உறவினர்க் கிடையே செல்வ
முற்றிலார் வாழ்விற் கானின்
மறமிகு புலிமா தங்க
வன்றிரட் கிடையே சென்று
செறிமர நிழலிற் றங்கித்
தீங்கனி நதிநீ ருண்டு
பெறுமர வுரியு டுத்துப்
பிறங்குபுல் லுறங்க லின்பம்.

36. உன் பிழைகளை யெண்ணிவாடு, பிறர்பிழை கூறநாடேல்.

உன்னுழை நிறைந்த தீமை
யுன்னிநீ யுருக மற்ருேன்
றன்னுழை நிறைந்த தேடிச்
சாற்றிடேல் சாற்றிடே லுன்
புன்னுனி நாவை நாளும்
பூட்டிய வறையிற் காக்க
வன்னியர் பிழையை யோதி
ஞைகலை புனித னீதான்.

37. வறுமை செய் சிறுமையை வஞ்சமாய்ப் புகழ்தல்.

வறுமை! நின் னருளாற் சால
வாய்த்தனன் சித்தன் றன்மை
வறுமை! நின் னருளா லென்னை
வையகத் தோர்கள் பாரார்
வறுமை! நின் னருளால் யானே
வழுத்துவன் பலரை நாடி
வறுமை! நின் பெருமை கூற
வல்லவ ராரே யாரே!

38. செல்வ மில்லார் செய்கையாதிய சிறப்புறு.

நினைத்ததை நினைத்த வாறே
நிகழ்த்துமோர் கருவிச் செல்வந்
தினைத்துணை யேனு மில்லார்
செப்புவ செய்வ யாவு
மெனைத்துணை யேனு மாரி
யின்றியே வறளு நாளிற்
புனத்துயிர்ப் புற்பூ டின்ன
பொன்றுதல் போலப் பொன்றும்.

39. வறுமையின் மகிமை.

முன்னுறப் பற்று வாசை
முடுகியே யீர்த்து நிற்பப்
பின்னுறப் பற்றி மானம்
பிடிவிடா திருத்தி நிற்பத்
தன்னுறு வலியை யின்றித்
தளர்வுற விரப்போ னின்மை
பன்னரர் மனையின் வாயிற்
பறந்துறச் செய்யுஞ் சாலம்.

40. வறுமை செய்யுஞ் சிறுமைகள்.

இன்மையால் வருந்துவோன் பொன்
னீட்டிடும் வழியை நாடி
நன்மைசேர் தந்தை தாயர்
நன்மதி மனைவி மக்க
டொன்மையாய் வாழ்ந்த நாடு
துன்றிய கிளைஞ ரின்னும்
பன்மையா மெவையும் விட்டுப்
படர்குவ னெடிய தூரம்.

41. இல்லார் படும் இடும்பைகள்.

பொருளிலான் புந்தி வீரம்
புகழ்பொறை சீலம் போகும்
அருளினு லான கல்வி
யனைத்துமே யவல மாகுந்
திரளுற விருந்த வுற்றார்
தீர்ந்துபோய்த் திரும்பிப் பாரார்
மருளறப் பழகி னோரு
மதித்திடார் மனித னென்றே.

42. உத்தம ஸ்த்ரீகளுக்குத் தேவராதிய வின்னவேனல்.

தேவ்ருங் குருவுந் தான
தீர்த்தமு நோன்பு மெல்லா
மாவது கணவ னேயா
மறிவுள சதிகட் கென்றுந்
தேவருங் குருவுந் தான
தீர்த்தமு நோன்பு மெல்லாம்
பாவமே யாக்கற் காகும்
பதியினைப் பற்றி லாட்கே.

43. நோயாளியைக் காணும் பலரும் பல காரணங்கள் கூறல்.

கூறுப வைத்திய நூலோர்
கூர்ங்கப பித்த மென்னக்
கூறுப கணித நூலோர்
கொடுங்கிரக சார மென்னக்
கூறுப மாந்தி ரீகர்
கொல்லுபேய் பூத மென்னக்
கூறுப ஞான மிக்கோர்
குலைக்குமுன் வினைக ளென்ன.

44. கிள்ளையும் பிள்ளையுங் கேட்டன சொல்லும்.

கிள்ளைதம் முன்னர்ப் பன்னுட்
கிளந்தன பழகி யாவு
முள்ளறி வின்மை யானே
யுரைப்பன வுவப்ப வென்று
மெள்ளுவ வென்று மெண்ணு
மிவ்வண்ண மிளைஞ ராய
பிள்ளையர் கேட்ட கற்றுப்
பிதற்றுதல் பெரியோர் குற்றம்.

45. உடலினுக் குழைக்குமவ்வளவு உயர்கதிக்கு வேண்டாம்.

உடலினை யோம்பல் வேண்டி
யுழைக்குநர் பொருளை யீட்ட
வடலுறு வெயிலைக் காற்றை
யாற்றலா மழையை மஞ்சைப்
படலரும் பாட்டை நாளும்
படுவரே யதிலோர் வீசங்
கெடலிலாத் தவத்திற் பட்டாற்
கேடிலா வீடு வாய்க்கும்.

46. மரணகாலத்தி லின்னோர் பெருந்துய ரடைவர்.

உண்டிடு முணவை யெண்ணி
யுடுத்திடு முடையை யெண்ணிக்
கொண்டிடு பதவி யெண்ணிக்
குவிதரு பொருளை யெண்ணி
யண்டிடு பலரை யெண்ணி
யாந்துணை யறமெண் ணாதார்
கண்டுதம் மாவி நீங்கக்
கலுழ்வர்கை தருவா ரின்றி.

47. நன்னடையிலார் கல்வியறிவு வீண்.

உண்மையுரை தவஞான
முயிர்வருத்த லில்லாமை
தண்மையளி யீகையெனுந்
தகைக்குணங்க ளெய்தாமே
வண்மையுறு கலைஞானம்
வாய்ந்திடலி னுவதென்னே?
வெண்மையுறக் கைவிளக்கோ
டிடறிவிழல் குழியிடையே.

48. ஆவதும் வாயால், அழிவதும் வாயால்.

வாய்தரு சொல்லின் வளர்வாள் பொன்னி
வாய்தரு சொல்லின் வளர்வார் நேயர்.
வாய்தரு சொல்லின் வருமால் சிறையும்.
வாய்தரு சொல்லின் வருமே மரணம்.

49. முயலா தேதும் முடியா தாகும்.

முயற்சியாற் கரும மெல்லா
முடிந்திடு மெவர்க்குஞ் சால
முயற்சியை யின்றி யெண்ணின்
முடிவதே தொன்று மின்று
முயற்சிசெய் துழலுஞ் சீயம்
முரண்யானை தன்னை யுண்ணு
முயற்சியற் றுறங்கின் வாயின்
முடுகிவீழ்ந் திடுமோ யானை?

50. இன்னதனால் இன்னது கேடுறும்.

சீறிய செருவிற் றீருந்
திருவளர் மனைகள் யாவுங்
கூறிய மொழியின் றீங்கிற்
குணமிகு நட்புத் தீரும்
மாறிய கோலிற் றீரு
மன்னவன் மாண்பு நாளும்
வீறிய செயலிற் றீரு
மிகுபுகழ் வாழ்வு மெல்லாம்.

51. எத்தகையோரும் இறத்தல் வேண்டும்.

கற்றவர் கல்லா ரென்றுங்
கைப்பொரு ளதனைச் சாலப்
பெற்றவர் பெறுதா ரென்றும்
பேரெழி லதனை வாய்த்த
லுற்றவ ருறுதா ரென்று
முவகைசா லிளைஞ ரென்று
மற்றவ ரென்றும் பாரான்
மறலிகைக் கொள்வ னந்தோ!

52. இவை இவற்றை யஞ்சுமெனல்.

பாருள மரங்க ளெல்லாம்
பவனனை நடுங்கி யஞ்சும்
நீருள கமல மெல்லாம்
நிலையழி சிசிர மஞ்சுஞ்
சீருள நல்லா னஞ்சுஞ்
செறிதரு தீயோர் தம்மை
யூருள குடிக ளஞ்சு
முயிருணுங் கொள்ளை நோயை.

53 மண்ணவர் மரணத்தை நினையாமை.

வாளர விடவாய்ப் பட்டு
வலிகெட லுற்றுந் தேரை
நீளவாழ் வுளதிற் றன்முன்
னின்றுழல் கொதுகை யுண்ணும்
மாளலே முடிவா யுற்ற
மண்ணவர் மறலிக் கென்று
மாளலர் போல வந்தோ
வலகிலா வெண்ணங் கொள்வா.

54. அற்பரும் ஒற்றுமை யுறின் அரியவை செய்வர்.

அற்பரா மனிதர் பல்லோ
ரகமொரு மித்துச் சேரிற்
பொற்புறக் காரி யங்கள்
புரிந்திட வல்ல ராவர்
அற்பமாந் திருணஞ் சேர்ந்திங்
காகிய கயிறு நன்கு
வெற்புநேர் யானை தன்னை
விசித்திடக் காண்டு மன்றே!

55. பாத்திரா பாத்திரங்களின் இயல்பு.

புல்லினை யாவிற் கீயப்
புலன்றரு பாலை யீயும்
பல்லினை வயமாக் கொண்ட
பாம்பிற்குப் பாலை யீயக்
கொல்லிய னஞ்ச மீயுங்
குணமிவை பாத்தி ரத்தின்
நல்லிய லபாத்தி ரத்தின்
நவையுறு மியலென் றோர்க.

56. நல்லார் பொல்லார் பேசும் வகைகள்.

தந்தியின் றந்த மென்னச்
சான்றவர் மாற்ற மென்றும்
வந்திவண் வெளியி னிற்கும்
வஞ்சமார் நெஞ்சர் மாற்றம்
வந்துபின் ஞெளிக்கும் பின்னும்
வரலுறு மஞ்சி யஞ்சி
மந்தமார் நடையின் கூர்மம்
மறைத்திடு முகம்போ லம்ம!

57. தீயோர் தாங்கெட லெண்ணாது பிறர் கேடெண்ணுவர்.

தீயவர் பிறர்க்குத் தேடிச்
செய்திடுஞ் செய்கை தேரில்
ஈயவர் பிறர்தீ மைக்கே
யீவர்தம் முயிரு மென்க
ஈயது மற்றோ ருண்டி
யிழப்பிக்கு முயிரை யீந்து
போயவ ருதரத் தூடே
போனதை யிழக்க வைக்கும்.

58. ஆசையறுதாரும் அற்றாரும்.

ஆசையை யறுக்கான் காட்டி
லமர்ந்துமே துன்பந் துய்க்கும்
ஆசையை யறுத்தான் வீட்டி
லமர்ந்துமே யின்பந் துய்க்கும்
ஆசையைத் துன்பத் தீயை
யாக்கிடுங் காட்ட மென்றே
ஆசையை யறுத்த மேலோ
னகங்களித் தாடு மென்றும்.

59. இளமையிற் கற்றது எளிதினில் நீங்காது.

தொட்டிலிற் பழக்க முற்றிச்
சுடுகாடு மட்டு மேகும்
விட்டிட லரிதி யார்க்கும்
விரும்புவோ ரிளைஞர் நன்மை
கெட்டிடுஞ் செயலைச் செய்யல்
கிளத்தலு மொழிக தம்முன்
பட்டிடு மவற்றைப் பின்னாட்
பயில்பவர் பால ரன்றோ?

60. இன்னவையின்றி யின்னவை பாழாம்.

பாழே மனையாள் பயிலா மனைகள்
பாழே மகனைப் பயவா மனையாள்
பாழே மகனும் பன்னூ லுணரான்
பாழே பலநூல் பரமே மறப்பின்.

61. நம்பால் தீமை குறைந்து நன்மையாகும் வகை.

இன்றியாம் புரிந்த வற்றி
லெவையறி வோரிற் கூட்டும்?
இன்றியாம் புரிந்த வற்றி
லெவையறி யாரிற் கூட்டும்?
என்றியாந் துயிலு முன்ன
ரெண்ணியே யெங்க நாளுங்
குன்றுவ தாகுந் தீமை
குணமிக வளர்வ தாகும்

62. இன்னார்க்கு அணிகலன் இன்ன தெனல்.

மயர்வறு கல்விச் சால்பு
மைந்தர்க்குப் பூண மாங்குச்
செயிரறு கற்புப் பூணந்
தெரிவையர் தமக்குத் தேரில்
உயர்வுறு பொறுமை பூண
முறுதவ முஞற்று வார்க்குக்
குயிலின மதற்குப் பூணங்
குரலுறு மினிமை யென்ப.

63. இன்னதற்கு இன்னது அழகாம்.

அழகுறும் வறிஞ னிங்க
    ளுரையு மிரவா னாகின்
அழகுறு மழகி லாதா
    ளழிவிலாக் கற்பை யெய்தின்
அழகுறுஞ் சுவையி லுண்டி
    யாக்கிய சூடு கூடின்
அழகுறும் பீறற் சீலை
    யழுக்கற வெளுத்த தாயின்.

64. இன்னவை இன்னவற்றையே யடையும்.

அடைந்திடும் பறவை யாண்டு
    மலைந்தபின் மரத்தைத் தேடி
அடைந்திடுங் குடிகளை யாவு
    மலைதரு கடலி லோடி
அடைந்திடும் பதியைத் தானே
    யறிவுறு நங்கை நாடி
அடைந்திடும் பொன்னைத் தாமே
    யளவிலாக் குணங்கள் பாடி.

65. உள்ளன்பில்லார் தோத்திர மாதிய வீண்.

பாடிய பாடு தற்கும்
    பகர்ந்தன பகர்வ தற்குந்
தேடிய கருவி யென்னைத்
    தேவனைத் துதிக்கி லென்னே?
வாடிய வுளமு மின்றி
    வடிதரு கண்ணு மின்றிக்
கோடிய பின்னுஞ் செய்யாக்
    கொள்கையு மின்றி யம்ம!

66. இன்னவற்றை யுயிருள்ளமட்டும் பிறர் தீண்டலரிது.

கற்புறு நங்கை யாளுள்
கவினுறு தனத்தின் மீதும்
அற்பமா லோபி வாழ்
யாக்கிய தனத்தின் மீதும்
வெற்புறு முழைச்சீ யத்தின்
விரிந்தகே சரத்தின் மீதும்
பிற்பட மாய்ந்தா லன்றிப்
பிறர்கரம் போட லின்றாம்.

67. இவைகள் தீமை விளைப்பவைகளாகும்.

நிசிவழி நடத்த றீதாம்
நீங்கலா நிந்தை தீதாம்
பசியழி யுணவு தீதாம்
பகைவரி னட்புத் தீதாம்
வசியலள் பெண்டு தீதாம்
வரையறு முணவு தீதாங்
கசிவுறு கரைநீர் தீதாங்
காலமன் மணமுந் தீதாம்.

68. ஆராயாமற் செய்ய லாகாதவை.

ஆய்ந்து கணிற் கொண்டுவழி
யடிவைத்தல் வேண்டும்
ஆய்ந்துதுணி கொண்டு புனல்
அருந்திடுதல் வேண்டும்
ஆய்ந்துமொழி யுண்மை தனில்
அறைந்திடுதல் வேண்டும்
ஆய்ந்துசெய லகத்தி னுடன்
ஆற்றிடுதல் வேண்டும்.

69. இவை பலவும் விட்டுவிடத் தக்கவைகள்

பிழைப்பிலா நாட்டி னீங்கிப்
பிறிதுபோய்ப் பிழைத்தல் வேண்டும்
பிழைப்பிடை விபத்துச் சேரிற்
பிறிதினிற் புகுதல் வேண்டும்
இழைப்பது நேயன் வஞ்ச
மெனிலவற் பிரிதல் வேண்டுந்
தழைப்பது மரண மாயிற்
றருநிதி துறத்தல் வேண்டும்.

70. இன்னார் சத்துரு போல்பவர்.

சத்துரு வந்தோ தந்தை
சல்லியக் கடனை வைத்தான்
சத்துரு வந்தோ வன்னை
சலவபி சார முற்றாள்
சத்துரு வந்தோ வில்லாள்
சண்டையுஞ் சதியு முற்றாள்
சத்துரு வந்தோ மைந்தன்
சகிக்கலா மூர்க்க முற்றான்.

71. பொருளிற்கு வந்தவழிப் பெருமை சிறுமைகள்.

பெற்றபொரு டான்வருந்திப்
பெருமையுறு முத்தமமாம்
பெற்றபொரு ளத்தனுழைப்
பெருமையுறு மத்தியமாம்
பெற்றபொரு ளுடன்பிறப்பிற்
பெருமையிலா வதமமதாம்
பெற்றபொருள் பெண்டுதவப்
பேசிலத மாதமமாம்.

72. இவை யின்றி யிவை பாழாம்.

ஒழுக்கமில் லுணர்வு பாழாம்
உணர்விலா வுடலம் பாழாம்
வழுக்கிய நிறையள் பாழாம்
வழங்கலார் வண்மை பாழாம்
அழுக்குறு மனத்தோன் பூசை
யனைத்துமே பாழாம் பாழாம்
பழக்கிலார் கான மின்ன
பயனுற லின்றிப் பாழாம்.

73. இன்னவை யிருத்தலில் துன்பமாம்.

ஆடிய பல்லைத் தோண்டி
யகற்றிடல் பிறரை நாளும்
நாடிய பெண்ணை நீக்கி
நகைகெட வாழல் வஞ்சம்
கூடிய நேயன் றன்னைக்
கொண்டிடன் மிகுதி யாய்வாய்
ஆடிடுந் தொழும்பன் றன்னை
யளியறத் துறத்தன் மைந்த!

இன்னவற்றைத் தொடக்கத்திலேயே நீக்கல்வேண்டும்.

பகையினைத் தொடங்குங் காலே
பற்றறத் தொலைத்தல் வேண்டும்
மிகையில்லை யென்ன வுன்னி
விட்டிடில் விபத்து நேரும்
புகையுறு தீயும் நோயும்
புலனழி கடனும் போலத்
தகையுற வளர்ந்து சாலத்
தனித்துயர் தருவ தாகும்.

75. கண்டகத்திற்கும் கண்டகனுக்குஞ் செய்வன.

கூரிய முள்ளி னுக்குங்
குணமழி கொடிய ருக்கும்
நேரிய செய லிரண்டு
நினைப்பினி லுரைப்பக் கேண்மோ
சேரிய லில்லா வென்னத்
தெரிவுடன் விலகிப் போதல்
வீரிய மழியக் காற்றோல்
விரைந்துவன் முக முடைத்தல்.

76. ஊருடன் பகைப்போன் வேருடன் கேடும்.

பேருரு வரவந் தன்னைப்
பிழைத்தது சீறும் போழ்தே
ஊரொரு கோடி யொன்றின்
உண்டிடு மெறும்பு மம்ம!
ஓரொரு பாடி மேலோன்
உள்ளவ ருறவ ரோடும்
நேரறு நேய ரோடும்
நிகழ்த்திடிற் பகைமை மாய்ப்பர்.

77. நம்மறிவோடு நாமே ஜெபமுதலிய புரிதல்வேண்டும்.

நம்முட னோயிற் பட்டு
நலிகையி னலிவு தீர
நம்முட னிருக்கு முற்றோர்
நாடிய மருந்தை யுண்ணில்
நம்முட னோய்க டீர்ந்து
நாஞ்சுக முறுத லுண்டோ?
அம்முறை யாகு நாமே
யாக்கிடாச் செப தபங்கள்.

78. மாந்தர் பிறர்குற்றங் காண்பர், தங்குற்றங் காணார்.

குன்றன குறைக டம்பாற்
குவிந்ததை யெண்ணா மாந்தர்
ஒன்றுமே பிறர்பா லுற்ற
தோடியே யெடுப்பர் காட்டக்
குன்றினைத் தூக்கிக் காட்டக்
கூடிய வலியர் யாவர்?
சென்றொரு கல்லைத் தூக்கச்
செறிவலி யுடையார் பல்லோர்.

79. ஆசையின் தளை யற்புதமான தளை

ஆசையெனுஞ் சங்கிலியி
னழுத்தியுறக் கட்டினவர்
ஆசைபல வற்றினுமே
அலைதருவ ராச்சரியம்
ஆசையெனுஞ் சங்கிலியி
னவிழ்த்துவிட லுற்றோர்கள்
ஓசையறக் கான்முடம்போ
லுற்றிடுவ ரோரிடத்தே.

80. ஆசையின் றீமை.

ஆசை!மா தேவி! யுன்னை
யச்சுடன் பணிவ னம்ம'
ஆசையா மயக்க மென்ற
னகத்திடை யாக்கல் கெட்டேன்
ஓசையா ருததி யென்ன
வுன்னியான் மணிக ளெய்த
நாசமான் குளப்பு நீரா
நண்ணின னந்தோ வந்தோ!

81. ஆசையின் இயல்பு.

விஞ்சிய வாசை தூண்ட
விரும்புவோன் பொன்னை யன்றி
யஞ்சிடுந் துன்பம் பல்ல
வதற்கிடை யாத லெண்ணான்
நெஞ்சினிற் பாலை யொன்றை
நினைத்துழல் பூனை தன்னைத்
துஞ்சிடப் புடைப்பான் கையிற்
றூக்கிய கழியெண் ணாதால்.

82. கற்றோர் சிறப்பு.

ஓரணி யின்றிக் கந்தை
யுடுத்தமான் விழியா ளுக்குப்
பேரணி பூண்டு பட்டிற்
பிறங்கிய குருடி நேரோ?
பேரணி பூண்டு பட்டிற்
பிறங்கிய கல்லா னேரோ?
ஓரணி யின்றிக் கந்தை
யுடுத்தநூல் வல்லா னுக்கே.

83. கல்விப் பொருளுக்கு உள்ள சிறப்பு

அடலுறு மன்னர் சோர
ரபகரித் திடுவ தன்றும்
விடலுறு தமையன் றம்பி
வீம்பினிற் கொள்வ தன்றும்
உடல்கெடு சுமையு மன்று
முதவலி ரேங்கு நாளுங்
கடலுடைப் புவியிற் செல்வங்
கல்வியின் மிக்க துண்டோ?

84. நாவை வருத்திக் கல்லார் உடன்முழுதும் வருந்த வுழைப்பர்.

கலைவள ரிளமை நாளிற்
கைப்பெரு விரனோர் நாவைக்
கலைவளர் முயற்சி யின்கட்
காதலின் வருத்தார் பின்னாட்
புலவினை ரேவல் யாவும்
புரிபவ ராகி யாக்கை
மலைவுள வருத்தங் கொள்ள
மாழ்கியே வாழ்வ ரந்தோ.

85. இன்னதுறுவிடி லின்னது வீண்.

பெற்றுள பொன்னி னென்னும்
பிறர்துயர் துடையா னயின்?
பெற்றுள படையி னென்னும்
பெரும்பகை முடியா னயின்?
பெற்றுள கலையி னென்னும்
பிணிப்புலன் வெல்லா னயின்?
பெற்றுள வுடலி னென்னும்
பெருந்தவ முடியா னயின்?

86. தீய புதல்வர் செயல்.

அன்பினின் மிக்கோ ராய
வன்னையைத் தந்தை யாரை
வன்பினின் மிக்கோ னாகி
வசைசொலி வருத்தி வந்தோன்
பின்பவ ராவி வீட்டைப்
பெற்றிட வேண்டு மென்னத்
தன்பல நண்பர் மெச்சத்
தருகுவன் றான மந்தோ!

87. இன்னவை இவ்வுலகில் இல்லாதன.

கந்தமில் கமல முண்டோ?
கபடமில் வணிக ருண்டோ?
தந்தையி றனய ருண்டோ?
தரணியிற் சாகா ருண்டோ?
தந்தபொன் திருடாத் தட்டார்
தமைக்கண்டா ருண்டோ? வுண்டோ?
வந்தவர் தமை வஞ்சித்தே
வாயின்மண் போடா வேசை?

88. இவை நிலையில்லாதவைகள்.

ஆருமைத் திருவின் றேவி
யமர்ந்தன ளகலா ளாகி?
ஆருமை யரையர் நேய
மழிவின்றி யாய தென்றும்?
ஆருமை யுடலை நீத்த
லடைந்திடா திருந்த தாவி?
ஆருமைக் கோப மோங்கி
யாக்கிய தின்று தாபம்?

89. இன்னவற்றில் இன்ன சிறந்தவை.

ஈகைபோற் சிறந்த வைப்பும்
எள்ளுறு முலோபம் போலச்
சாகைசெய் பகையு மாண்பு
சான்றநல் லொழுக்கம் போல
வோகைசெய் யணியு முள்ளத்
துவகைபோற் செல்வந் தானுந்
தோகையே யனையா யிந்தத்
தொல்லுல கினில்வே றுண்டோ?

90 இதற்கிது சிறந்தது.

சிறந்ததுவாய் பேசாமை
செப்பிச்செய் யாமையன்றும்
சிறந்ததுகூழ் கடனின்றிச்
செறிகடன்சே ரமுதன்றும்
சிறந்ததுயிர் நீத்துவிடல்
தீர்தலிலா நிந்தையன்றும்
சிறந்ததுபோ யேற்றல்பிறர்
சேர்பொருளை வவ்வலன்றும்.

91. இன்னதற்கு இன்னதே சிறந்தது.

உடலினை யூட்டந் தாயின்
உற்றநல் லுறவோ ரில்லை
உடலினை வாட்டச் சிந்தை
யுலையுதி லுலைவே றில்லை
உடலினைப் பூட்டக் கல்வி
யுறுவதி லணிவே றில்லை
உடலினை வீட்ட வுண்டி
யுயரள வதில்வே றில்லை.

92. முன் இடாதாரே பின் இரப்பாராவர்.

"போவிலை" யென்றென் றேரட்டிப்
புகன்றசொல் லிரண்டு முன்னாள்
"தாவிலை" யென்றென் றேடச்
சமைந்தன விந்நா ளம்ம!
காவிலை யுடையா ரில்லுங்
கடிசுணங் குடையா ரில்லுப்
போவதில் லார்க ளில்லும்
புகுந்துபோ யிரப்பா னுக்கே.

93. உள்ளத்தின் தூய்மையே உயர்கதிக்கானது.

உடலழுக் குற்றுத் தேய
வுடைநல முற்றூர் போலக்
கெடலுள வெண்ண நெஞ்சிற்
கிளைதரக் களையா ராகி
யடல்விளை ஞானக் கோல
மாயிரங் காட்டி லேதாம்?
விடலிலா வுள்ளத் தீமை
வீடுசேர் வழிய டைக்கும்.

94. இவைகள் மிக்க துயர் விளைப்பவைக ளாகும்.

வளமிலாச் சிற்றூர் வாழ்க்கை
வன்மனக் கயவர் சேவை
உளமதற் கிசையா வுண்டி
யொற்றுமை யில்லாப் பெண்டிர்
இளமைசேர் விதவைப் பெண்கள்
இகழ்நடை மூர்க்க மைந்தர்
வளர்பெருந் தீயை யின்றி
வாட்டியே யெரிப்ப வந்தோ!

95. அப்பியாசத்திற்கு அசாத்தியமில்லை.

கோவலன் புதல்வி முன்னாட்
கூர்ந்தொரு கன்றில் வாஞ்சை
ஆவன பலவு மூட்டி
யணிவித்தா ளதனைத் தூக்கிப்
போவதும் வரலு நாளும்
புரிந்தனள் பசுவ தாகி
எவரும் வியந்து நோக்க
எடுத்ததை நடப்பா ளானாள்.

96. இன்னதற்காக வின்னதை விடல் வேண்டும்.

விடுகவோர் குடும்பங் காக்க
விரைவினி லொருவன் றன்னை
விடுகவோ ரூரைக் காக்க
வியன்பெருங் குடும்ப மொன்றை
விடுகவோ ரூரை யாங்கே
விடலரும் பதியைக் காக்க
விடுகவிம் மண்ணின் யாவும்
விளிவிலான் மாவைக் காக்க.

97. மாண்புள்ளார் மதபேதங் கொள்ளார்.

கண்ணப்ப னுளைப் போவார்
கடவுளிற் கண்ட பேற்றின்
விண்ணப்பன் மண்ணோர் சாதி
விதித்தில னென்ப தாகும்
நண்ணுபே ரறிவின் மேலோர்
நான்கிலு மொன்றே காண்பர்
எண்ணியிவ் வுண்மை நீவி
ரெவர்க்குமே தயையோ ராதிர்.

98. இஃதில்லாதது இன்னதாகாது.

கலையுணர் பெரிய ரில்லாக்
கழகமோர் கழக மாமோ?
கலையுணர் பெரிய ரல்லார்
கலிகெடத் தருமஞ் சொல்லார்
நிலையுறு தரும மன்றும்
நிகரிலா வாய்மை நீங்கின்
மலைவறு வாய்மை யன்றும்
மாண்பழி வஞ்ச மெய்தின்.

99. செல்வர்பாற் கல்வி மிக்க சிறப்புறும்.

தங்கத்தின் மணிபோற் கல்வி
தகைபெறுஞ் செல்வர்க் காகில்
வங்கத்தின் மணிபோற் கல்வி
வனப்பறும் வறிஞர்க் காகில்
தங்கத்தின் மணி குயிற்றிற்
றகாவிலை பெறுவ தாகும்
வங்கத்தின் மணியை யாரும்
மதிக்கலர் மணிய தாக.

100. பெரியோருள்ளம் வெண்ணெயிலும் இளகியது.

மற்றூ ரிடைத்தாப மண்டுவதைக் கண்டறிஞ
ருற்றூ ரிலத்தாப முள்ளுருகித் தாங்கரைவர்
அற்றூத லுண்டுகொலோ வாயி னவனீதம்?
கற்றூ ருளமதெனக் கழறுமவன் கற்றவனே?

(சுபமஸ்து)

முதற்சதகம் முற்றிற்று.

உத்தம நீதி.

முதற் சதகம்.

அரும்பத விளக்கம்.

சதகம்—நூறு சேர்ந்தது.

செய்யுள்—1.

கலை—சாஸ்திரம்.
காப்பியம்—இலக்கிய நூல்கள்.
நுகரல்—உண்ணுதல் (ரஸம் அறிதல்).
தொலைவு—நாசம்.

செய்யுள்—2.

காகா—காகா என்று கரைதல்.

செய்யுள்—3.

இடர்—கெடுதி.
கேணி—கிணறு.
தொடுதல்—வெட்டுதல்.

செய்யுள்—4.

பிறருழையில்—பிறரிடத்தில்.
கொள்ப—அடைவார்கள்.
மாற்சரியம்—பொறாமை.

செய்யுள்—5.

தின்மை—கெடுதி.
நவை—குற்றம்.

செய்யுள்—6.

செற்று—வருத்தப்படுத்தி.
பொறுத்தல்— பொறுத்துக்கொள்வாயாக.
சீற்றம்—கோபம்.
அமரர்—தேவர்கள்.

செய்யுள்—7.

ஆடி—கண்ணுடி.

செய்யுள்—8.

பெட்பு—விருப்பம்.
மோக்கம்—மோக்ஷம்
ஆரம்—முத்துமாலை
மங்கலநாண்—தாலிக்கயிறு.
கைம்பெண்—விதவை.

செய்யுள்—9.

மறம்—வலிமை
ஆங்ஙன்—(அங்ஙனம்) அப்படி.
நலிவது—வருத்தப்படுதல்.
அலி—சூரத்தனமில்லாதவன்.

செய்யுள்—10.

சில்லோர்—சிலர்.
ஆய்வார் — யோசித்துப்பார்ப்பர்.

செய்யுள்—11.

உடையினில்—உடுப்புப்போல
பிறிது—சம்பந்தமில்லாதது
சுடலை—சுடுகாடு.
போற்ற—காப்பாற்ற.
துன்மை—வருத்தம்.

செய்யுள்—12.

உடலுறு—உடலில் உண்டாகிற.
பிணிகள்—ரோகங்கள்.
அன்ன—அந்த நோய்கள்.
அடலுறின்—வருத்தப்படுத்தினால்.

செய்யுள்—13.

கோக்கள்—இராஜாக்கள்.
வந்தியேன்—துதிக்கமாட்டேன்.
கண்ண—கிருஷ்ண!
போற்ற—(நான்) துதிக்கும்படி.

செய்யுள்—14.

உயங்கிய—வாடிப்போன.
அண்ணலின்—இராஜனைப்போல்.
மாற்றம்—பேச்சு.
இயம்பலை—பேசாதே.
உண்ணலம்—மனத்தின் பரிசுத்தம்.

செய்யுள்—15.

ஆற்றல்—சக்தி, வல்லமை.
துகள்—குற்றம்.
வன்பு—தீமை.
கொன்—கூர்மை.
குரு—பெரிய.

செய்யுள்—16.

தாரம்—மனைவி.
ஆடுநர்—நாடகமாடுகிறவர்.

செய்யுள்—17.

கரி—யானை.
பரி—குதிரை.
ஆக்கள்—பசுக்கள்.
மாழ்கி—துக்கமுற்று.
பேழை—சிறுபெட்டி.
சிதை — பிணமெரிக்க வடுக்கிய கட்டை முதலியவை.

செய்யுள்—18.

கவின்—அழகு.
ஏறு—சிங்கம்.
தும்புரு—சங்கீதத்திற் சிறந்த முனிவர்
குயம்—முலை.
அல்வயில்—இராக்காலத்தில்.
அலைதரு—திரிகிற.
கரம்—கழுதை.

செய்யுள்—19.

பிராசி—கிழக்குத்திசை.
பானு—சூரியன்.
இமம்—பனி.
அசலம்—மலை.
பங்கஜம்—தாமரை.
பதலை—மலைக்கல்.
மாற்றம்—சொல்.
அறைந்தது—சொன்னது.

செய்யுள்—20.

குட்டம்—கைகால் குறையும் ஒரு வியாதி.
பட்டு—இறந்து.
பற்று—ஆசை.
வினை—பாவம்.
விளியாத—சாவில்லாத.

செய்யுள்—21.

அல்லது—பொன் அல்லாதது.
போமோ—விலையெடுக்குமோ?
நவிலும்—சொல்லும்.
நடுவு—பக்ஷபாதமில்லாத நடக்கை.
ஆர்—நிறைந்த.

செய்யுள்—22.

முக்கால்—காலை, பகல், மாலை.
நீறு—திருநீறு.

பிறங்கு—பிரகாசிக்கின்ற
கண்மணி—ருத்திராக்ஷம்.
வார்—நீளமான.
அரா—பாம்பு.
வாதம்—காற்று.
புரி—செய்கிற

செய்யுள்—23.

ஓவல்—நீங்கல்.

செய்யுள்—24.

ஆவினை—பசுவை.
மூா வினை—பெரும் பாவம்
மாண்—சிறப்புள்ள.

செய்யுள்—25.

அலரிடை—பூவில்.
மேலா(க)—உயர்ந்தவனாக.

செய்யுள்—26.

மதி—பகுத்தறியும் அறிவு.
பண்—சங்கீதசாஸ்திரம்.
அரிய—அருமையான காரியங்கள்.

செய்யுள்—27

வறுமை—தரித்திரம்.
அஞ்சா—அஞ்சி.
இன்மை—தரித்திரம்.
உடற்றும்—வாட்டும்.

செய்யுள்—28.

மறுத்தன—உண்ணலாகாவெனத் தள்ளியவை.
மறுமை—விட்டுவிடாமல்.
கல்வியான் – கல்விகற்றதினாலுண்டான அறிவினால்.

செய்யுள்—29.

போந்து—போய்.
சாலும்—மேலானதாகும்.
கனிகாம்—அன்பு.
கலுழ்தல்—அழுதல்.
கோடு—மரக்கிளை.
குலைவு—நடுக்கம்.

செய்யுள்—30.

விண்ணிடை—ஆகாயத்தில்.
விருக்கம்—மரம்.
விருப்பின்—இஷ்டப்படி.
வைகி—வசித்து.
கண்ணற—இரக்கமில்லாமல்.
மாற்றம்—பேச்சு.
பகர்தல்—பேசுதல்.
கிள்ளாய்—கிளியே!

செய்யுள்—31.

பொங்கு — சந்தோஷம் விளைக்கின்ற.
புகல்—பேச்சும்.
நடை—நடையும் உள்ள.

செய்யுள்—32.

தெருள்—ஆராய்ச்சி.
பட்டோன்—வீழ்ந்தவன்.
செப்பிடின்—சொல்லினால்.
இல்லவள்—மனைவி.

செய்யுள்—33.

வான்—சுவர்க்கம்(மேல் உலகம்).
மயர்வு—மயக்கம்.
கயவன்—கீழ்மகன்.
கடைத்தலை—வீட்டுவாயில்.

செய்யுள்—34.

புந்தி—அறிவு.
புவியிடை—பூமியில்.
மூப்பு—கிழத்தனம்.
வரம்—மேலான.
வித்தம்—பொருள்.
அந்தகன்—எமன்.

செய்யுள்–35.

மறம்—கொடிய தன்மை.
மாதங்கம்—யானை.
வன்றிரள்—பெருங்கூட்டம்.

செய்யுள்–36.

உன்னி—எண்ணி.
சாற்றிடேல்—சொல்லாதே.
புல்—அற்பகுணமுள்ள.
காக்க—காத்துக்கொள்வாயாக.
புனிதன்—பரிசுத்தன்; குற்றமில்லாதவன்.

செய்யுள்–37.

சித்தன்—தவ மகிமையால் மண்ணுடலைவிட்டு வசிக்கவல்லவன்.
வழுத்துவன்—தோத்திரம் செய்கிறேன்

செய்யுள்–38.

நிகழ்த்தும்—நடக்கச்செய்யும்
தினைத்துணை—ஒரு சிறிதும்.
செப்புவ—சொல்லுகிறவை.
மாரி—மழை.
புனம்—வயல்
பொன்றுதல்—அழிதல்

செய்யுள்–39.

பற்று—பிடித்து.
முடுகி—வேகமாய்.
ஈர்த்து—இழுத்து
பன்னரா—பலமனிதர்.
உற—இருக்க.
சாலம்—வித்தை

செய்யுள்–40.

தொன்மை—பழைமை.
துன்றிய—நெருங்கிய.
கிளைஞர்—உறவினர்.
படர்குவன்—போவான்.

செய்யுள்–41.

பொறை—பொறுமை.
சீலம்—நல்லநடை.
அவலம்—பயனற்றது.
திரள்—கூட்டம்.
மருள்—மயக்கம்.

செய்யுள்–42.

சதி—உத்தம ஸ்திரீ
பதி—புருஷன்.
பற்றிலாள்—விரும்பாதவள்.

செய்யுள்–43.

கூறுப—சொல்லுவர்.
கபம்—சீதள சம்பந்தரோகம்.
கணிதநூலோர்–சோதிஷம் அறிந்தவர்
கிரக சாரம்—சனி, குரு முதலானவற்றின் கெடுதி.
குலைக்கும்—கெடுக்கும்.

செய்யுள்–44.

கிளந்தன—சொன்ன சொற்கள்
உரைப்பன—சொல்லும்.
உவப்ப — (கேட்டவர்) விரும்பத் தக்கவை.
எள்ளுவ—நிந்திக்கத்தக்கவை.

செய்யுள்–45.

ஓம்பல்—காப்பாற்றுதல்
உழைக்குநர்—உழைக்கிறவர்.
ஈட்ட—சம்பாதிக்க.
மஞ்சு—வெண் மேகம்.
வீசம்—பதினாறில் ஒரு பங்கு($\frac{1}{16}$).
வீடு—மோக்ஷம்.

செய்யுள்—46.

கலுழ்பவர்—துக்கப்படுவோர்.

செய்யுள்—47.

அளி—இரக்கம்.
தகை—தகுதியுள்ள, சிறந்த.
எய்தாமே—அடையாமல்.
எண்மை—இகழ்ச்சி.

செய்யுள்—48.

பொன்னி—லக்ஷ்மி.

செய்யுள்—49.

கருமம்—காரியம்
சால—அதிகமாய்.
சீயம்—சிங்கம்.

செய்யுள்—50.

செரு—சண்டை.
திரு—லக்ஷ்மி.
வீறிய—எல்லைகடந்த.

செய்யுள்—51.

எழில்—அழகு
உவகை—சந்தோஷம்.
மறலி—எமன்

செய்யுள்—52.

பவனன்—காற்று.
சிசிரம்—குளிர்மிக்ககாலம்.

செய்யுள்—53.

தேரை—தவளை.

செய்யுள்—54.

பொற்பு—திருத்தம்.
புரிந்திட—செய்ய
வெற்பு—மலை.
விசி—கட்டு

செய்யுள்—55.

வயம்—பலம்.
அபாத்திரம்—தகாதவன.

செய்யுள்—56.

நந்தி—யானை.
சான்றவர்—பெரியோர்.
கூர்மம்—ஆமை.

செய்யுள்—57.

உதரம்—வயிறு.
ஊடு—உள்ளே

செய்யுள்—58.

துய்க்கும்—அநுபவிப்பான்.
ஆக்கிடும்—வளர்க்கிற.
காட்டம்—விறகு.

செய்யுள்—59.

கிளத்தல்—சொல்லுதல்.
பட்டிடும்—நடக்கிற
பயில்பவர்—செய்து பழகுகிறவர்

செய்யுள்—60.

பயவா—பெறாத.
பரமே—கடவுளை

செய்யுள்—61.

ஏங்க—வியசனப்பட்டால்.

செய்யுள்—62.

செயிர்—குற்றம்
தெரிவை—பெண்.
உஞற்று—செய்

செய்யுள்—63.

வறிஞன்—ஏழை.
பீறல்—கிழிந்ததான.

செய்யுள்—64.

குடினை—ஆறு
பதி—கணவன்

செய்யுள்—65

பகர்ந்தன—சொன்னவைகள்
கோடிய—தவருன காரியங்கள்.
கொள்கை—மனவுறுதி

செய்யுள்—66.

நங்கை—உத்தமி
தனம்—மார்பு
முழை—குகை
சீயம்—சிங்கம்
கேசரம்—பிடரிமயிர்

செய்யுள்—67.

வசி—அடங்கினவன்
வரையறும்—அளவுக்குமிஞ்சின

செய்யுள்—68.

அருந்து—குடி
அறை—சொல்
ஆற்று—செய

செய்யுள்—69.

பிறிது—வேருரு நாடு
இழைப்பது—செய்வது
தரு—(கேட்டவை தரும்) கற்பகம்
நிதி—இரு நிதிகள்

செய்யுள்—70.

சல்லியம்—துன்பம்
சலம்—வஞ்சனை
சதி—உட்பகை.

செய்யுள்—71.

உத்தமம்—மேலானது.
மத்தியமம்—இடைப்பட்டது.
அதமம்—கீழ்பபட்டது
பெண்டு—பெணசாதி
உதவ-(சீதனததிலிருந்து)கொடுக்க
அதமாதமம—கீழ்பபட்டதிற கீழ்ப பட்டது

செய்யுள்—72.

ஒழுக்கம்—நல்ல நடக்கை
உடல்(அம)—உடமபு
வழுக்கிய—தவறிப்போன
நிறையள்—கற்புடையவள்
வழங்கலார்—கொடாதவருடைய
வண்மை—செல்வம்
பழக்கு—அப்பியாசம்
கானம்—பாட்டு.

செய்யுள்—73.

அகற்றிடல்—நீககிவிடுவாயாக
தொழும்பன்—ஊழியக்காரன்.
அளியற—இரக்கமின்றி.

செயயுள்—74.

பற்றுஅற—சிறிதும் சேஷம் வைக்காமல்
விபத்து—ஆபத்து (கெடுதி)
புலனழி—அறிவைக்கெடுக்கின்ற
தகையுற—பலமடைய
தனி—ஒப்பற்ற

செய்யுள்—75.

கொடியர்—கெட்டவர்
நேரிய—தகுந்த
நினைப்பினில்—யோசிதது
கேண்மோ—கேளுங்கள்.
இயல்—தன்மை
காற்றோல் — (1) உள்ளங்காலின் தோல். (2) உள்ளங்காலுக்கு இடுந்தோல் (=செருப்பு).
முகம்—(1) கூர். (2) முகம.

செய்யுள்–76.

அரவம—பாம்பு
ஒன்றின்—ஒன்ருய்ச் சேர்ந்தால்
ஓர்—ஆராய்நதுபார்.
பாடி—சிற்றூா

செய்யுள்–77.

நலிவ கயில்—வருநதுமபோது.
நாடிய—அநத நோயக்குத் தகக தென்று கண்ட

செய்யுள்–78.

குன்றன—குன்று அன்ன, மலே போன்ற.
வலியர்—பலமுள்ளவர்.

செய்யுள்–79.

ஆசை(2)—திசை.

செய்யுள்.–80.

அச்சு—பயம்.
பணிவன்—நமஸ்கரிககிறேன்.
ஆககல்—உண்டாக்காதே.
உததி—கடல்
ஆன் —பசுவின்
ுளபபு—குளம்புவைத்த பள்ளத் துள்ள
நண்ணினன்—அடைந்தேன்.

செய்யுள்–81.

விஞ்சிய—அளவில்லாத.
பல்ல—அநேகம்
உழல—திரிகிற.
பூனை—பூனே
துஞ்சிட—சாகும்படி.
புடைப்பான்—அடிக்க.
தூக்கிய—(ஒருவன்) தூக்கிநின்ற.
சழி—தடி.

செய்யுள்–82.

அணி—நகை.
பிறங்கிய—பிரகாசிககிற
நூல்வல்லான்—பலநூல்கள் கற்று வல்லவன்.

செய்யுள்–83.

அடல்–(1)பராககிரமம் (2)கொல் லுதல்
சோரா—திருடா
வீம்பினில்—வழககிட்டு
உதவலின்—கொடுபபதனல்.
உடை—உடையாகக்கொண்ட.
புவியில்—பூமியின்மேல்

செய்யுள்–84.

பெருவிரல்-அங்குஷ்டம் என்னும் கட்டைவிரல்
விரல்நேர்—விரலினளவுள்ள.
புலே—இழிவு
யாக்கை—உடல்.
மலேவு—அழித்தல்
மாழ்கி—துக்கமடைந்து.
அநதோ—ஐயோ!

செய்யுள்–85.

துடையான்—நீககான்
பிணி—துன்பம்
புலன்—ஐம்புலன்கள்.

செய்யுள்–86.

வசை—நிந்தை மொழிகள்.

செய்யுள்–87.

கந்தம்—கிழங்கு
கமலம்—தாமரை.
வணிகர்—வர்த்தகர்.
தனயர்—பிள்ளேகள்.
தரணி—பூமி.
சாகார்—சாகாதவர்.

செய்யுள்—88.

திருவின்றேவி—லக்ஷ்மி.
நீத்தல்—விட்டுவிடல்.
தாபம்—பச்சாத்தாபம்.

செய்யுள்—89.

வைப்பு—சேர்த்துவைக்குந் தனம்.
எள்ளுறும்—இகழபபடுகிற.
உலோபம்—உலோபியின் குணம்.
சாகை—அழிவு.
ஓகை—பெருமை.
தோகை—மயில்.
அனையாய்!—போன்றவளே!

செய்யுள்—90.

அமுது—(சிறந்த) உண்டி.
ஏற்றல்—பிச்சைகேட்பது.
வவ்வல்—அபகரித்தல்.

செய்யுள்—91.

சிந்தை—மனக்கவலை.
வீட்ட—அழிக்க.

செய்யுள்—92.

சமைந்தன—ஆகின.
சுணங்கு—நாய்.
இரப்பானுக்கு—பிச்சை கேட்கிற தற்கு.

செய்யுள்—93.

அடல்—பராக்கிரமம்.
கோலம்—வேஷம்.

செய்யுள்—94.

கோவலன்—இடையன்.
புதல்வி—மகள்.
வாஞ்சை—ஆசை.
அணிவித்தாள—அலங்காரஞ் செய்தாள்.
போவது—போதல்.

செய்யுள்—95.

செய்யுள்—96.

வியன்—பெரிய.
பதி—பட்டணம்.
விளிவு இல்—அழியாத.

செய்யுள்—97.

கண்ணப்பன்—திண்ணனார் என்னும் வேடன்.
நாளைப்போவார்—நந்தன் என்னும் பறையன்.
விண்ணபபன்—கடவுள்.
நான்கு—நாலு ஜாதிகள்.

செய்யுள்—98.

கழகம்—சபை.
கலி—அநீதி.
மலைவு—அழிவு.

செய்யுள்—99.

வங்கம்—ஈயம்.
குயிற்றில்—பதித்தால்.

செய்யுள்—100.

தாபம்—துக்கம்.
மண்டுவது—மிகுவது.
உற்றாரில்—அடைந்தவர்போல்.
அற்று—அவ்வாறு.
நவனீதம்—வெண்ணெய்.
கழறும்—சொல்லும்.

உததமநீதியின் முதற் சதக வரும்பதவிளக்கம் முற்றிற்று.

Printed at the S. P. C. K. Press, Vepery, Madras—1908.